Regd. No M. 4900

8 பக்கங்கள்.

குடி அரசு

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. , தனிப்பிரதி 0-1-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-1-3.

மாலை 22 } ஈரோடு 9-4-1949 சனிக்கிழமை } மலர் 31.

புளுகுமூட்டை.

கந்தன்.

★

கோடைக்காலம். பகலெல்லாம் வெயிலின் வெம்மையும் புழுக்கமும் சகிக்கமுடிவதில்லை. மாலைப்போது வந்ததும் மொட்டைமாடியில் கயிற்றுக் கட்டிலை எடுத்துப் போட்டுக்கொண்டு நிம்மதியாக உட்கார்ந்தேன். தென்றல் குளிர்ந்து வீசியது.......

'விர்'ரென்ற ஒரு பெரும் ஓசை இடைவிடாது கேட்டது, விண்ணில் விமானம் பறக்கும்போது உண்டாவது போல. அந்த ஓசை வரவர என்னை நெருங்கியதோடன்றித் தலைக்கு மேலேயே கேட்கவும், திகைப்பும் அச்சமும் மேலிட்டவனாய் அண்ணாந்து பார்த்தேன். என்ன அதிசயம்! இது என்ன, நினைத்த இடத்தில் இறங்கக்கூடிய "ஹெலி காப்டர்" விமானமோ? அப்படியே வந்து என் வீட்டு மாடியில், என் எதிரில், இறங்கி விட்டதே! நன்றாக உற்றுப்பார்த்தேன். ஆ! மயில்! மயில் மேல் ஆறு முகம்! பன்னிருகரங்கள்! அடடே கந்தப்பெருமானல்லவா எழுந்தருளியிருக்கிறார்! "கந்தா, கடம்பா, கதிர்வேலா, நல்ல இடங்காண் இரங்காய்!" என்று வேண்டிக்கொண்டே காலில் வீழ்ந்து வணங்கி எழுந்தேன்! ஆச்சரியம்!! ஆறுமுகனையுங்காணோம், அவர் ஏறிவந்த மயில் வாகனத்தையுங்காணவில்லை. யாரோ ஒரு சாதாரண இளைஞன் கட்டிலின்மீது அமர்ந்திருந்தான். "எழுந்து வந்து இப்படி உட்காரப்பா" என்றான் அந்தப் புதிய ஆள். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. "நீர் யார்?" என்றேன்.

"நான் தான் கந்தன், கடம்பன்... இன்னும் எல்லா இழவும்."

"மயிலெங்கே, ஆறுமுகங்கள் எங்கே? பன்னிரு கைகள் எங்கே...?"

"இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற முட்டாள் நீ, மயிலாவது, பறப்பதாவது? மனிதனுக்கு ஆறுமுகம் இருக்க முடியுமா?"

"அடெ! நேற்றுக்கூடப் புளுகானந்தவாரியார் கந்த புராணப் பிரசங்கத்தில் கூறினாரே—'அஞ்சு முகந் தோன்றில் ஆறுமுகந்தோன்றும்' என்று என்னென்னவோ சொன்னாரே?"

"அவன் ஏதோ வயிற்றுப்பிழைப்புக்கு ஜாலவித்தை செய்தால் அதை நீயெப்படி நம்பலாம். நீ படித்தவன் தானே? விஞ்ஞானம் தெரியுமல்லவா உனக்கு!"

"அது கிடக்கட்டும். உண்மையில் நீ கந்தன் தானே. உன் வரலாறென்ன சொல்வாயா?"

"ஆகா. சொல்லித் தொலைக்கத் தானே வந்தேன். கலியுக வரதன் என்று புகழ்ந்து, பாமரர்கள் முட்டாள்தனத்தை வளர்த்துக்கொண்டு, காட்டுமிராண்டித்தனமாய் உடலெல்லாம் அலகு குத்திக்கொண்டு, குரங்குபோல் காவடி எடுத்துக் கூத்தாடுகிறார்களே—இவர்களையெல்லாம் தன் இஷ்டப்படி ஆட்டி வைத்துக் கஷ்டப்படாமல் காசு பறிக்கிறானே—பிரம்மன் முகத்தில் பிறந்ததாகக் கூறிக்கொள்ளும் பார்ப்பான்—அவன் என்னைப்பற்றி என்ன எழுதி வைத்திருக்கிறான்...."

"ஒரு சமயம் என் தந்தை சிவபெருமான் மோகலாகிரி மிதமிஞ்சியதால் என் அன்னை பார்வதியைப் பிடித்து நெடுங்காலம் புணர்ந்திருந்தாராம். இவ்வளவு காலம் போகம் செய்தால், அதன் வாயிலாகப் பிறக்கும் பிள்ளையைத் தன்னால் தாங்க முடியாதென்று சாக்குக்கூறி, ஏற்கனவே என் தந்தை மீது வெறுப்புக்கொண்டிருந்த பார்வதி மறுத்துவிடவே, சிவன் தன் ஏராளமான வீரியத்தை அக்கினிதேவன் மூலமாக சரவணப் பொய்கையில்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

இந்தி எதிர்ப்பு நாள் 10—4—49

★

இந்த மாதம் 10-ந்தேதி தமிழ் நாடெங்கும் வழக்கப்படி இந்தி எதிர்ப்பு நாளாகக் கொண்டாடப்படுவதில் மாணவர்கள் கூட்டுறவையும் ஒத்துழைப்பையும் பெறவேண்டியதில் கழகத்தார்களும் இந்தி எதிர்ப்பு கமிட்டியினரும் தனிக் கவலை செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கொண்டாட்டக் கூட்டத்திலும் ஊர்வலத்திலும் கட்டுப்பாடற்ற தன்மையோ, கலாட்டா குழப்பமோ, சிறிதும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது முக்கிய கடமையாகும்.

—ஈ. வெ. ரா.

இங்கர்சால் சொற்பொழிவு.

ஒரு நன்றி கூறும் நடப்பு!

தமிழாக்கம்:— நெடுஞ்சேரலாதன்.

ஆலயம் யாது செய்துள்ளது?

ஆலயம் கலைக்கும், இலக்கியத்திற்கும் வைரியாக இருந்திருக்கிறது. கிரேக்க நாட்டு, உரோம நாட்டுச் சலவைக் கற்களை அழித்திருக்கிறது. அழகை அழிவாகக் கருதியது. உலகில் சிறந்த இலக்கியங்கள் எவ்வளவு இருந்தனவோ அவ்வளவையும் முடியுமட்டும் அழித்திருக்கிறது. சிந்தனைக்குப் பயந்தது. ஆயினும் வேதங்களைக் காப்பாற்றியும், பைத்தியகார குரு தன்மையையும், பொய்மையான தந்தையர் தன்மையையும், (பாதிரி) எருதுகளான போப்பாண்டவர்களையும், தெய்வீக ஆலயங்கள் செய்த அதிசயங்களையும், சுண்டிய குருதிகளையும், வெளிறியமயிரையும், துண்டுகளான எலும்புகளையும், உருத்திராட்சங்களையும், அழுக்கேறிய நகங்களையும், முட்களையும், கைத் துண்டுகளையும், கிழிசல்களையும், நீரையும், தாயஆவியின் விரலை பற்றியும் விளக்கும் இலக்கியம்-வேதம், புனிதம் இவைகளை சேர்த்து வைத்துள்ளது.

இவைகள்தாம் ஆலயத்தின் இலக்கியமாகும்.

பாதிரிகள் உண்மையானவர்கள்—அறியாமையில் எவ்வளவு உண்மையாளர் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். மேற்கொண்டு அதிகம் சொல்லலியலாது.

ஆலயம் வேறுயாது செய்துள்ளது?

பைத்தியக்காரர்கட்கு விடுதி அமைத்ததாக கிருஸ்து மதம் பெருமகிழ்ச்சியோடு கொண்டாடுகிறது. ஆம்! அது அமைத்தது உண்மைதான். ஆனால், அவைகளை பேய்களின் இல்லம் என அறைந்தது. அவைகள் ஒதுக்கியும், நீக்கியும் வைக்கப்பட்டது. அங்குள்ளோரை விலங்கிட்டும், சித்திரவதை செய்தும், பட்டினி போட்டும் கொன்றார்கள். பைத்தியக்கார விடுதிகள் சிறைச்சாலையாகவும், இருட்டறையாகவும், அதிலே வதிந்தவர்கள் குற்றவாளிகளாகவும், அதைப் பாதுகாத்தவர்கள் மூடர்களாகவும், அறியாமையாளராகவும், பேயின் பக்தர்களாகவும் மதித்தது. ஆலயம் மக்களுக்காக உழைக்கவில்லை. பேய்களை எதிர்த்தும், வேதாளங்களை அழிக்கவும் முற்படுகிறதாம். விடுதிகள் அன்பிற்காகக் கட்டப்பட்டதல்ல; வெறுப்பினாலும் பயத்தினாலும் கட்டப்பட்டதாகும்.

ஆலயம் யாது செய்துள்ளது?

ஆலயம் பள்ளிகள் எழுப்பியது. ஆனால் அங்கே உண்மைகள் வெறுக்கப்பட்டன, விஞ்ஞானம் விடுபட்டது, தத்துவங்கள் தள்ளப்பட்டன. குருமார்களை உற்பத்தி செய்யவும், உண்மைகளை அறிய வெறுக்கவும், பேயின் எண்ணங்களை அய்யத்தால் அறிவதற்கும், பல பள்ளிகளை ஏற்படுத்தியது. தெய்வீக எண்ணங்களும், தெய்வீக உண்மைகளும் எங்கெங்குள்ளதோ அங்கெல்லாம் பள்ளிகளை அமைத்தது. அறியாமையை பொதுவாக அதிகரிக்கச் செய்யவும், சிந்தனையைத் தடுக்கவும், அதன் கொள்கைகளைத் திணிக்கவுமான பல பள்ளிகளை அமைத்தன. உலகை அடிமைப்படுத்த பள்ளிகளை எழுப்பியது. மாணவனைக் காட்டிலும் அதிகம் அறியாத ஆசிரியர்களைக் கொண்ட பள்ளிகள் அவை.

ஆலயம் யாது செய்துள்ளது?

கடவுளுடன் அதிக உரிமையை பாராட்டி மழை பெய்யவும்; சூரியன் ஒளிரவும்; வெள்ளத்தையும், புயலையும் நிறுத்தவும்; புழு, பூச்சி, எலி பாம்புகளையும், காட்டு மிருகங்களையும்கூட கொல்லவும், பஞ்சம் பட்டினியை நிறுத்தவும்; குளிரையும் பனியையும் தாமதிக்கச் செய்யவும்; அரச, அரசிகளின் வாழ்வை நீடித்ததாக்கவும்; தலைவனை பாதுகாக்கவும், துரைத்தன குழுவினருக்கு அறிவு புகட்டவும்; பணத்தையும் ஆதரவையும் அதிகமாகவசூலிக்கவும், திரட்டவும், பாடுபட்டுள்ளது. திருமணங்களிலேகடவுளை மூன்றாம் பகுதியாளராக ஆக்கியுள்ளது. குழந்தைகட்கு பெயரிடும்போது நீரை தெளித்து இருக்கிறது. இறந்தோரின் மேல் நெய்யிட்டு, பிரார்த்தனைகளை ஒலித்திருக்கிறது. மக்களை பிசாசின் பிடியினின்றும்; பேய், பூதங்கள் அணைப்பினின்றும்; மந்திர, சூனியங்களினின்றும் நீக்கி, பக்தி என்னும் நஞ்சை எல்லோரின் உள்ளங்களிலும் கலக்கப் பாடுபட்டிருக்கிறது. கடவுளின் ஆட்டுக் குட்டிகளை, விஞ்ஞானம்என்ற ஓநாயிடமிருந்தும்; அய்யம், ஆராய்ச்சி என்ற பெரும் காட்டுப் மிருகங்களினின்றும் காப்பாற்றப்பாடுபட்டுள்ளது. ஆண்டவ்னின் ஆட்டுக் குட்டிகளை ஒளியினின்றும், ஆசை, வாழ்க்கை மகிழ்ச்சிகளினின்றும் ஒட்டப்பாடுபட்டு இருக்கிறது. ஆலயத்தின் தத்துவப்படி, புனிதர்கள் அழவும்—இன்னலுறவும், புல்லர்கள் மகிழவும் — பெருமையடையவும், நல்லவர்கள் சிலுவையைத் தூக்கவும், தீயவர்கள் பறக்கவும் வேண்டுமாம். இவையெல்லாம் அடுத்த உலகிற்காக சேகரித்து வைக்கப்படுமாம். பின்பு நல்லோர் மகிழவும், தீயோர் தண்டிக்கவும்படுவார்களாம்.

ஆலயம் உலகை பக்தியாலும், தவறுகளாலும் நிரப்பிவிட்டது.

ஆலயம் மகிழ்ச்சியின் ஊற்றை அடைத்துவிட்டது. அது நமக்கு மடமையும், தற்புகழ்ச்சியும், பொறாமையும், கொடூரமும் நிறைந்த கடவுளையும், சில சமயம் கருணையுள்ள, சிற்சில சமயம் பயங்கர கடவுளையும் கொடுத்திருக்கிறது. சரியான — இகழ்ச்சியான—சில சமயம் அறிவான—பொதுவாக மடமையான கடவுளர்களைத்தான் கொடுத்திருக்கிறது. தந்திரமும், திறமையும்,—ஆனால் கடவுளுக்கு சமமான—அவரைப் போன்ற வலிமையில்லாவிடினும், விரைவுமிக்க—அவரைப்போல சமர்த்தில்லாவிடினும், கூர்மை மிக்க ஒரு பிசாசை நமக்குக் கொடுத்திருக்கிறது.

நமக்கு இறக்கைகள் கொண்ட கந்தர்வர்களையும், அழகிய தெய்வலோகக் குழந்தைகளையும், கந்தர்வர்களிலேயே சிறந்த அழகிகளையும், மகிழ்ச்சியும், புகழ்ச்சிப்

இராம இராவணரின் பூர்வீக யோக்கியதை!

[கைவல்யம்]

★

இராமன், இராவணன் இவர்களில் யார் விசேடமுடையவர்கள் என்பதைப் பற்றிப் புலவர் குழந்தையவர்கள் இராவண காவியமென்று ஒரு புராணம் எழுதினார். அதை இராசாங்கத்தார் பறிமுதல் செய்து விட்டது எல்லோருக்கும் தெரியும். இராமனைத் தாழ்த்தியும் இராவணனைத் தூக்கியுமெழுதினதே தடை விதிக்கக் காரணம்.

இராவணனுக்குப் பத்துத் தலை, இருபதுகை, ஒருதலையையும்இரண்டு கைகளையும் கிள்ளி அக்கினியில் போட்டுத் தவசு செய்தவன், திக்கு கஜங்களை மார்பில் பாயவிட்டு தந்தங்களை ஒடித்து மார்புக்கு ஆபரணங்களாகச் செய்து கொண்டவன், அந்தத் தந்தங்களோ பல யோசனை நீளமுடையது, அய்ம்பது லட்ச வருடம் அவன் வயது, தெய்வலோகத்து மயனுடைய மகள் அவன் பெண்சாதி, இப்பேர்ப்பட்ட ஜெந்து சிருஷ்டியிலிருப்பது சாத்தியமில்லை. சாதி, குலம், பிறப்பு, இறப்பு, பந்தம், முத்தி எதுமின்றி எப்பொருளுக்கும் முதற் பொருளாயிருக்கும் பரம்பொருள், அநேகம் கோடி ஜனங்கள், அநேக வகுப்பு,சாதி இத்தனைகளையுமுடைய அகண்ட உலகத்தில், ஒரு சிறு இடத்திலுள்ள ஒரு சிறு கூட்டத்தினரை இரட்சிக்க மனிதனாக அவதாரம் செய்து, ராமனாக விளங்கினார் என்பது நம்பவும் இருக்கக் கூடியதுமன்று என்றாலும், அதையே ஜனங்கள் நம்பி வருவதாலும் அதைப் பற்றியே விவகாரங்கள் வந்து கொண்டிருப்பதாலும், எதற்கும் நமக்கு இதிகாச புராணங்கள் பிரமாணமானபடியாலும் அந்த இதிகாசப்புராணங்களில் இராமன் இராவணன் பிறப்புகளைச் சொல்லியிருப்பதை எழுதுகிறேன்.

இராமருடைய மூலமான விஷ்ணுவின் சரித்திரங்களை இதிகாசப்புராணங்களில் பார்த்தால் விஷ்ணு நியாயத்திற்கு நேர் விரோதமாக நடந்து அதனால் சாபம் பெற்று இராமராக பிறந்ததாகவிருக்கிறது. இராவணனுக்கு அப்படி ஒன்றுமில்லை. அவைகள் இதிகாசப் புராணங்களிலுள்ளதேயல்லாமல் சுயமரியாதைக்காரர்கள் சொல்லுவதல்ல. நமது பழையமுதல்மந்திரி பக்தி செலுத்தும் சுப்பிரமணியக் கடவுளின் சரித்திரமான கந்த புராண இதிகாசத்திலேயே விஷ்ணுவின் ஒழுக்கவீனம் சொல்லப்பட்டிருக்கிறது.

கற்பில் சிறந்த விருதை என்கிற பெண்சாதியுடன் அதிபலவானான விருத்திராசூரன் என்பவன் வாழ்ந்து வந்தான். விஷ்ணு விருதையின் பேரில் ஆசை கொண்டார். சூரனிடம் பலதடவை சண்டை போட்டார். தோற்றுப் போனார். சிவபெருமானிடம் முறையிட்டார். சிவபெருமான் சூரனைக் கொன்றார். இறந்துபோன சூரன் உடலுக்குள் விஷ்ணு புகுந்து விருதையிடம் வந்து சூரனாக நடித்து விருதையுடனிருந்தார். விஷ்ணுவின் ஏமாற்றை விருதை தெரிந்து, அடேபாவி! வஞ்சனையால் என் கற்பைக் கெடுத்தாய்! ஆனதால் நீ மனிதனாகப் பிறந்து உன் பெண் ஜாதியை என் ஜாதிக்காரன் வஞ்சனையால் கொண்டுபோய், உன் பெண்ஜாதியின் கற்பும் கெடட்டும் என்று சாபம் கொடுத்து தீயில் விழுந்து செத்தாள். இவள் சாபமதான் விஷ்ணு இராமராகப் பிறந்தார் என்று முக்கிய புராணம் சொல்லுகிறது.

உலகமெல்லாம் சுற்றி வரும் நாரதர் ஒரு ராஜ்ஜியத்தில் சுயம்வரம் நடப்பதைத் தெரிந்து அந்தப் பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ள ஆசைப்பட்டார். அதற்கு தகுந்த அழகு தனக்கில்லாததை நினைத்து விஷ்ணுவிடம் போய் தன் எண்ணத்தைத் தெரியப்படுத்தி, அவருடைய அழகைத் தரும்படியாகக் கேட்டார். விஷ்ணு எல்லா அழகையும்கொடுத்து முகத்தைமட்டும் குரங்குருபமாகக்கொடுத்தார். அதோடு சுயம்வரத்திற்கு நாரதர் போனார். விஷ்ணுவும் போனார். நாரதருடைய குரங்கு முகத்தைப் பெண் பார்த்து, நாரதருக்கு கலியாணமாலை போடாமல் விஷ்ணுவிற்கு போட்டாள். விஷ்ணு கலியாணம் செய்து கொண்டு வந்தார். இதை நாரதர் தெரிந்து விஷ்ணுவிடம் வந்து, துரோகி! என்னை மோசம்பண்ணி நான் விரும்பின பெண்ணை என்னை ஏமாற்றி நீ கல்யாணம் செய்து கொண்டு வந்த வஞ்சனைக்காக, நீ இன்னொரு ஜென்மமெடுத்து உன் பெண்சாதியை ராட்சதன் வஞ்சித்துக் கொண்டு போய் சிறைவைக்கட்டும், அதை மீட்டுவர இந்தக் குரங்கு முகமுடைய கூட்டமே உதவிபுரியட்டும் என்று சாபம்கொடுத்தார். நாரதர் சாபமும் விருதைசாபமும் விஷ்ணுவின் அயோக்யத்தனத்தால் கிடைத்தவை. அதனால் விஷ்ணு இராமராகப் பிறந்தார். இதனால் இராமருடைய முன் ஜென்மத்தின் யோக்யதை விளங்கவில்லையா?

இராவணனுடைய முன்ஜென்மம் அப்படியல்ல. யோக்கியப் பொறுப்புடன் தன் கடமையைச் செய்தவன். இராவணனுடைய அவதாரமும் ரிஷிகளுடைய சாபத்தால்வந்தது. ரிஷிகள் நியாயத்திற்கு விரோதமாய் சாபம் கொடுத்தார்கள். அதை விஷ்ணுவும் அங்கீகரித்தார். அதிலும் மகாவிஷ்ணு குற்றவாளிதான். எப்படி எனில் விஜயன் ஜெயன் என்கிற இரண்டு பேர்கள் வைகுண்டத்தில் விஷ்ணுவின் அரண்மனையை காவல் காத்து வந்தார்கள். இவர்களுக்குத் துவாரபாலர்களென்று பெயர். ஒரு நாள் விஷ்ணு, நானும் லெட்சுமியும் அரண்மனையின் அந்தப்புரத்தில் இன்று தனியாக இருப்போம், யாராயிருந்தாலும் உள்ளே விடாதீர்கள் என்று உத்திரவுபோட்டிருந்தார். அந்த சமயம் பிர்மாவின்பிள்ளைகளான ஜெனேயமகா ரிஷிகள் அரண்மனைக்கு வந்து விஷ்ணுவைப் பார்க்கவேண்டு மென்றார்கள். இந்தச் சமயம் விஷ்ணுவைப் பார்க்கமுடியாது அரண்மனைக்குள் போகவும் கூடாது என்றார்கள் காவலாளிகள். அவர்கள் வார்த்தையை லட்சியப்படுத்தாமல் உள்ளேபோனார்கள். இவர்கள் தடுத்தார்கள். நீங்கள் ராட்சதர்களாகப் போங்களென்று ரிஷிகள் சாபம் கொடுத்தார்கள். எங்கள்எஜமான் உத்தரவுப்பிரகாரம் உங்களைத் தடுத்தோம், அது எங்களுடைய வேலையுமாகும் அதற்காகச் சாபம் கொடுப்பது நியாயமல்லவே என்றார்கள் துவார பாலர்கள். பிராமணர்களான நாங்கள் எங்கே போனாலும் தடுப்பதற்கு யாருக்கும் அதிகாரமில்லை. எல்லாம் பிராமணர்களுக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறதென்றார்கள், ரிஷிகள். இந்த சத்தத்தை விஷ்ணு கேட்டுவந்தார். துவார பாலர்கள் விஷ்ணுவிடம் சொன்னார்கள். பிராமணர்கள் கொடுத்த சாபத்தை என்னாலும் தீர்க்க முடியாது. அதனால் சாபப் பிரகாரம் இராவண கும்பகர்ணனாகப் பிறப்பீர்; நான் ராமராகப் பிறந்து உங்களைச் சம்காரம் செய்து அழைத்துக்

(தொடர்ச்சி 5ம் பக்கம் பார்க்க)

பாடல்களும் கொண்ட பொன் பாதையையும், வைரக் கதவைத் கொண்ட மோட்ச உலகத்தையும் கொடுத்திருக்கிறது.

(தொடரும்)

குடி அரசு

9—4—49 சனிக்கிழமை.

பொறுத்துப் பார்ப்போம்.

"உண்மை தோற்றது, பொய்ம்மை வெற்றி பெற்றது. நாணயம் நலிந்தது, நம்பிக்கைத் துரோகம் செழித்தது. யோக்கியதைக்குமதிப்புஇல்லை, அயோக்கியத்தனத்திற்கு ஆடம்பர வரவேற்பு."— இவை இன்று இந் நாட்டிலுள்ள பெரும்பாலான மக்களின் பேச்சு. ஆம்! ஓமந்தூரார் என்றைக்கு, தான் ராஜினாமாச் செய்யப்போவதாகச் சொன்னாரோ, அன்று முதல் சென்ற 10-நாளாக எங்கும் இதே பேச்சுத்தான்.

இவ்வளவுக்கும் ஓமந்தூரார் ஆட்சியில், இந்த நாட்டு மக்களின் குறைபாடுகள் எல்லாம் போக்கடிக்கப்பட்டன, வயிறார மக்கள் பசி தீரவுண்டனர், அறியாமை அழிக்கப்பட்டு மக்கள் அறிவில் உயர்ந்து விளங்கினர் என்று சொல்லக் கூடிய நிலையில்லை. இன்னும் சொல்லப்போனால், ஓமந்தூரார் ஆட்சியில்தான் இந்த நாட்டுத் தொழிலாளிகள் ஈவு இரக்கமற்ற முறையில் ஒடுக்கப்பட்டார்கள். மொழிப்பற்று உடைய இளங்காளையரும், தாய்மாரும் மூர்க்கத்தனமான வழிகளால்—காட்டுமிராண்டிப் போக்கோடு தாக்கப்பட்டனர். இன்னும் எத்தனை எத்தனையோ தொல்லை! இருந்தாலும் ஓமந்தூராரின் ராஜினாமா, உண்மைக்கும் நாணயத்திற்கும் யோக்கியதைக்கும் ராஜினாமாவாகக் கருதப்படுகிறது என்றால், இதிலுள்ள உண்மை என்ன என்பதை, ஓமந்தூராரை வெற்றிகொண்டதாக மனப்பால் குடிக்கும் தோழர் காமராஜர் எண்ணிப்பார்க்கவேண்டும்.

"சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்றால், பார்ப்பனீயத்துக்கும், பனியாக்களுக்கும் அடிமையாக்கப்பட்டிருக்கும் ஒரு அரசியல் அமைப்பில், அங்கம் வகிக்கின்ற யாராயிருந்தாலும், இந்த நாட்டு மக்களின் நலத்திற்காக என்றோ, பெருமைக்காக என்றோ, உரிமைக்காக என்றோ ஒரு சிறு காரியத்தையும் செய்ய இயலாது என்பதை பெரும்பாலான மக்கள் நன்றாகப் புரிந்து கொண்டுவிட்டார்கள். இந்த அமைப்பையுடைய ஆட்சியில், ஓமந்தூராருக்குப் பதிலாக வேறுயார் வந்தாலும் (இன்று காங்கரஸ் எம். எல். ஏக்களாயிருக்கும் தோழர்களுக்குள்) அவரால் நாட்டுக்கோ—நாட்டு மக்களுக்கோ ஒரு பயனையும் எதிர்பார்க்க முடியாது என்று தீர்க்கமாக முடிவு கட்டிவிட்டார்கள்" என்று கூறுவதைத் தவிர, வேறு என்ன காரணத்தைக் கூறமுடியும் என்று நாம் தோழர் காமராஜரைக் கேட்கிறோம்.

ஓமந்தூரார், தன் ஊருக்குச் சென்று ஓய்வு பெற்றுக் கொள்ள, "மக்கள் நம்பிக்கையை இழந்துவிட்டேன், மக்களுக்கு நான் பிரதிநிதியல்ல; ஆதலால் என் ராஜினாமாவை ஏற்றுக்கொள்க!" என்ற ராஜபாளையத்தார் நாட்டையாளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்றாலும், ஓமந்தூராரின் இன்றைய ஓய்வுக்குக் காரணம் (1) பொதுநலத்தின் பேரால் சுயநல வாழ்வையே போற்ற வேண்டியது என்ற முடிவுக்கு வந்த எம். எல். ஏக்கள் சிலர், (2) அதை ஆதரித்துத் தூபம் போட்டு வளர்த்து, அந்த நிலையைத் தான் ஏன் அடையக் கூடாது என்று கருதிய மந்திரிகள் சிலர், (3) ஓமந்தூரார் கையாண்ட வகுப்பு நீதிக்கு எதிராக எழுந்த பார்ப்பனீய நயவஞ்சக வேலை ஆகிய இந்த மூன்று கருவிகளையும், பார்ப்பனீயப் பாதம் வருடும் தனக்கு, ஒன்றாக்கி உபயோகிக்கும் சந்தர்ப்பம் கிடைத்ததுதான் என்பதைத் தோழர்காமராஜர் அறியாதவரல்ல. ஆனால் இதைத் தன்னுடைய வெற்றி என்று நினைப்பாரேயானால், அது அவருடைய அழிவுக்கு அறிகுறியேயாகும்.

நிற்க, ஓமந்தூரார் ஒதுங்கியதாலோ, ராஜபாளையத்தார் பிடித்து வைக்கப்பட்டதாலோ, நம்மைப் பொறுத்தவரை அனுகூலமோ, பிரதிகூலமோ ஒன்றும் இல்லை. எப்படியும் திராவிடர்தான் பிரதமராகமுடியும் என்பதுதான், இந்தச் சூழ்ச்சி வேலைப்பாட்டாலும் கூட மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது. மந்திரிகளின் எண்ணிக்கை பெருகினாலும்கூட, பார்ப்பனர்களுக்கு ஒன்றா, இரண்டா என்றுதான் முடிவுகட்ட வேண்டியிருக்கிறது. வேண்டுமானால் பார்லிமெண்டரி செக்கரட்டரியாக எத்தனை பேரை அதிகப்பட்சமாக நுழைக்கலாம் என்று ஆலோசனை செய்து தீரவேண்டியதாகத்தானிருக்கிறது. இந்த அளவுக்காவது தங்களுடை மானத்தைக் காப்பாற்றிக்கொண்டுவிட்டார்கள் எம்.எல். ஏக்கள் என்றுதான் கூறவேண்டும்.

ஆசை வார்த்தை பேசினால்தான், அக்கிரம நடத்தைக்கெல்லாம் அனுகூலமாக நடந்துகொண்டால்தான் பதவியைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று கண்டு கொண்டு, பதவியை உதறித் தள்ளிய ஓமந்தூராரை—அவரின் நேர்மைக்காக நாம் பாராட்டுகிறோம். "மானத்தை விற்றேனும் வாழ்வதே மேல்" என்று பழகியிருக்கும் சில திராவிடர், ஓமந்தூரார் மந்திரி சபையில் ஒட்டிக் கொள்ளத் தூண்டியும் கூட, அதை அற்பர்களின் இழி செயல் என்று தெளிந்து, அகமலர்ச்சியோடு கை கழுவி விட்ட அவரின் மனவுறுதியைப் பெரிதும் போற்றுகிறோம்.

பார்ப்பனீயச் சதிச் செயல் வெற்றி பெற்றது என்றாலும், அது ஒரு திராவிடரின் உருவில் தான் என்பதை எண்ணும்போது கட்சித் தலைவராய்—பிரதமராய் வைக்கப்பட்டிருக்கும் தோழர் குமாரசாமி ராஜா அவர்களையும் வரவேற்கிறோம்.

ஆனால் இன்றையப் புதுப் பிரதமான ராஜபாளையத்தார், எந்த அளவுக்கு வெற்றியாகத்தன் நிர்வாகத்தை நடத்திக் கொண்டு போக முடியும் என்பதில், நாம் உண்மையாகவே ஒன்றும் சொல்ல முடியாத நிலையில்தானிருக்

ராஜா முத்தையா

றோம்.

ஓமந்தூரார் ஏன் ராஜினாமாச் செய்தார்? என்பதை ராஜா அவர்கள் எண்ணுவாரேயானால், அவரை ராஜினாமச் செய்யச் செய்த எம். எல். ஏக்களும், மந்திரிகளும், பார்ப்பனீயப் பாவையான காமராஜரும் அவர் கண்ணுக்குத் தெரியாமல் இருக்க முடியாது. அந்த "நல்லோர்களின்" ஆதரவுதான் தனக்கு என்று அவர் அடுத்தபடியாக நினைப்பாரேயானால், அவர் நிச்சயமாகப் பெருங்கலக்கத்திற்குத்தானே ஆளாகவேண்டியிருக்கும்.

வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமானால், இன்றைய புதுப் பிரதமர், ஓமந்தூராரின் துரோகிகள் என்று சொல்லப்படவேண்டிய ஏழுபேரைத் தன் சகாவாகக் கொண்டிருக்கிறோம் என்பதை மறந்துவிட முடியாது. அதுபோலவே ராஜபாளையம் தன்னுடைய எந்தச் செயலுக்கும் நன்றி விசுவாசந்தான் காட்டவேண்டும் என்று நம்பிக் கொண்டிருக்கும் ஒரு இனத் துரோகியின் முழு ஆதரவில்தான் இருக்கிறோமென்பதையும் மறக்கமுடியாது.

இந்த நிலையில் சிக்கிக்கொண்டிருக்கும் தோழர் ராஜா அவர்கள், இனி எப்படி நடந்துகொள்வாரோ? பொறுத்துப் பார்ப்போம்.

OOOOOOOOOOOOO:OOOOOOOOOOOOOOO

ஒப்புயர்வற்ற குறள் நாள்!

★

ஏப்ரல் 12-ல் எங்கும் கொண்டாடுங்கள்!

இந்த மாதத்தில் சென்னையில் குறள் நாள் வெகு ஆடம்பரமாகக் கொண்டாடப்பெறவேண்டும் என்று ஆசை கொண்டிருந்தேன். பெரியார் திரு. வி. க. அவர்களையும் அதில் கலந்து கொள்ளவேண்டும் என்று வேண்டிக்கொண்டேன். அவரும் மகிழ்ச்சியோடு இசைந்தார். ஆனால் அதை இந்த மாதத்தில் நடத்த எனக்குப் போதிய வாய்ப்பில்லாமல் போய் விட்டது குறித்து வருந்துகிறேன்.

கோவை ஜில்லா சுற்றுப்பிரயாணமும், பிரசாரப்பள்ளியும் இம்மாதத்தைக் கவர்ந்து கொண்டன. அவற்றை மாற்ற முடியவில்லை. ஆதலால் சமீபத்தில் அடுத்த மாதத்தில் ஒரு நாள் தனிமையாய் சென்னையில் கொண்டாடக் கருதி இருக்கிறேன்.

ஆனாலும் இம்மாதம் 12-ம் தேதி நல்ல முழு நிலவு நாளாக இருக்கும். ஆதலால் 12-ம் தேதியில் தமிழ்நாடு முழுவதும் திராவிட கழகத்தார் உட்பட எல்லாத் தமிழ் மக்களும் அவசியம் தவறாமல் ஒவ்வொரு ஊரிலும், திருவள்ளுவர் நாள் கொண்டாடவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

தமிழர் பண்பு, திராவிடகழகக் கொள்கைகள் யாவற்றிற்கும் குறளில் ஆதாரங்கள் இருக்கின்றன. குறள் ஜாதிகள், மதங்கள், கடவுள்கள் ஆகியவற்றைக் கடந்த அறிவு நூல்; மூடநம்பிக்கைக்கு ஆளாகாத பகுத்தறிவு நூல்; அன்பையும், ஒழுக்கத்தையும், உயர்ந்த பண்புகளையும் ஜாதியாகவும் மதமாகவும் கடவுளாகவும் கருதச் செய்யும் அரிய நூல்.

எதைக்கொண்டு இப்படிச் சொல்கிறேன் என்றால், மேற்குறிப்பிட்ட தன்மைகளுக்கு எல்லாம் வேண்டிய ஆதாரங்கள் குறளில் இருக்கின்றன.

குறளுக்கு இதுவரை கண்ட உரைகள் பல அவரவர்கள் கருத்துக்கு ஏற்ப கண்டவைகளாகவே காணப்படுகின்றன. ஆதலால் ஜாதி மத கடவுள் உணர்ச்சி கடந்து இயற்கை உணர்ச்சியோடு பகுத்தறிவைக் கொண்டு நடுநிலையில் நின்று உரை கண்டால் அவ்வுரை மூலம் திராவிட கழகம் விரும்பும் கருத்துக்களைக் காணலாம். ஆதலால் குறளைப் போற்றுங்கள்! குறளைப் படியுங்கள்!! குறள் உள்ளத்தைக் காணுங்கள்!!!

எனவே, ஏப்ரல் 12-ம் தேதியை குறள் நாளாகக் கொண்டாடுங்கள் என்று வேண்டிக்கொள்கிறேன்.

—ஈ. வெ. ரா.

OOOOOOOOOOOOO:OOOOOOOOOOOOOOO

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கிறேன் என்றார். இராவணனுடைய முன் ஜென்மம் துவாரபாலர். எஜமானுடைய கட்டளைப் பிரகாரமும், தன்னுடைய வேலையின் நியமப்பிரகாரமும் நடந்தவர்கள். இராமனுடைய முன் ஜென்மம் விஷ்ணு. விஷ்ணுவின் முன் ஜென்மம் குற்றம் நிறைந்தது; இதனால் இராவணன் இராமர் இவர்களில், யார் விசேடப்பட்டவர்கள்? யாருடைய காவியத்தைத் தடுக்கவேண்டுமென்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

துவார பாலர்களுக்குச் சாபம் கொடுத்த ரிஷிகள் கதை, பிராமணர்களின் உயர்வுக்கும், அவர்களுக்கு எதிலும் தடையில்லாமலிருக்கவும் எழுதப்பட்டது. இப்பொழுதும் ஒருவரைப் பார்க்க அவர் வீட்டுக்குப் போகும் பிராமணன், வீட்டார் என்ன வேலையாகவிருந்தாலும், யாருடன் பேசிக்கொண்டிருந்தாலும், வீட்டு வாசலில் எந்தக் காவலிருந்தாலும் "அவாள் இருக்கிறார்களோ எங்கே இருக்கிறார்கள்?" என்று கேட்டுக் கொண்டே போய்த் தன் காரியத்தை நிறைவேற்றிக்கொண்டு முதலில் வந்துவிடுவதைப் பார்க்கலாம். பிச்சை வாங்கவரும் பார்ப்பார ஆணும் பெண்ணும் வாசலில் நின்று பிச்சை கேட்கமாட்டார்கள்; நடு வீட்டுக்குள்ளேயே வந்து கேட்பார்கள். இவையெல்லாம் அந்தக் கதை புராணங்களினால் வந்தவை. தெய்வமே பிராமண சாபத்திற்குப் பயந்திருப்பதாகவும், பிராமண சாபத்தை மாற்ற தெய்வத்திற்கே சக்தியில்லையென்றும் தெய்வங்களே சொல்லுகின்றன. பற்றாக்குறைக்கு "அந்தணர் குறை முடிப்பான் பிறந்தேன். அதற்காகவே வில் எந்தியிருக்கிறேன்" என்று ராமரும் சொல்லுகிறார். இந்தக் கதைகளினால்தான் ஒழுக்க நியமங்கள் இல்லாமல் எல்லாம் கெட்டுவிட்டது. இதைச் சொன்னால் பார்ப்பார்களையே குற்றம் சொல்லுகிறார்கள். வகுப்புத் துவேஷமென்கிறார்கள். ஆங்கிலேய அரசாட்சியில் பயம், நியமம், ஒழுங்கு முறை இருந்தது. அவர்கள் போனவுடன் அவை போய்விட்டது. சமயமில்லாத சமயத்தில் எனக்குத் தொந்தரவு கொடுத்து என் வேலையைக் கெடுக்கிறார்கள்

[உரிமை ஆசிரியருக்கே]

தொல்காப்பியப் பொருளதிகார விளக்கம்.

—(புலவர் குழந்தை)—

IV.

1. பழந்தமிழ் நாட்டின் - இயற்கை வளம்.

பண்டு தமிழகம் ஓர் அழகிய பூந்தோட்டம் போல் இருந்தது. "வண்புகழ் மூவர் தண்பொழில்" (செய். 79) என்பது சான்று. பொழில்-சோலை. இங்கே நாடு. ஊரைச் சுற்றிலும் இளமரக்காச் சூழ்ந்திருக்கும். ஊர் நடுவிலும் பலமரங்கள் நின்று பயன்தரும். "பயன்மரம் உள்ளூர்ப்பழுத்தற்று" (குறள் 216) ஊரையடுத்து நீரோடைகள் ஓடும். இவற்றின் இரு கரைகளையும் பல்வகை மரங்கள் அணிசெய்யும். நிலப் பரப்பின் ஒவ்வொரு சிறு பிரிவுக்கும், நாட்டுப்பிரிவுக்கும் காடுகளே எல்லைகளாயிருந்தன. நகர்களுக்கும் நாடுகளுக்கும் காடுகளே அரண்களாயிருந்தன. அரண்-காவல்.

"மணிநீரும், மண்ணும்,
மலையும் அணிநிழல்
காடும் உடைய தரண்"
(குறள் 742)

எனக்காண்க. மணிநீர்-தெளிந்த நீர், எப்போதும் வற்றாத நீர். மண்-நீரும் நிழலும் இல்லாத மருநிலம். அணிநிழல்காடு-செறிந்தகாடு. நீரரண், நிலவரண், மலையரண், காட்டரண் என்னும் நான்கரணும் சூழப்படுவதே கோட்டை. மலைகளிலும், மலைச்சாரல்களிலும், மட்டவெளிகளிலும், பள்ளத்தாக்குகளிலும், கடற்கரைகளிலும் பெருமரக்காடுகள் செழித்தோங்கியிருக்கும். அக்காடுகளில் பல்வேறு வகையான பழமரங்களும், நறுமணமிக்க பூஞ்செடி கொடிகளும் அடர்ந்திருக்கும். கார்காலத்தில் இலையுதிர்ந்து, பனிக்காலத்தில் தளிர்விட்டுத் தழைத்து, வெயிற்காலத்தில் பூத்துக் காய்த்துப் பழுத்துப் பயன்தரும் மரங்கள், பழையதைப் பூப்பால் களைந்து, தங்காதலருடன் கூடிக் கருவுற்று மக்களைப் பெற்ற மங்கையர் போல் விளங்கும். எங்கு பார்த்தாலும் பசும்புற்றரைகள் பச்சைப் பசேலென வானங்கவிழ்ந்தாற் போல் தோன்றும். விலங்கினங்களும், புள்ளினங்களும் தம்மிடமெனத் தங்கிப் புல்லுங் கனியுமுண்டு கூடிக் குலவிவாழும். பன்னிறப் பூவேலையும், பொற்சரிகையும் அமையப்பெற்ற பச்சைப் பட்டாடையை மகளிர்கூடி நோக்குதல் போல, பச்சைப் பசேலென்ற இலைகளுக்கிடையே பன்னிறப் பூக்களும், செந்நிறக்கனிகளும்

என்று முதல் மந்திரி சொல்லவும், ஆபீஸ் குமாஸ்தா விசிட்டர் இடத்திலிருந்து சட்டசபை மெம்பர்களுடன் பேசவும், சட்டசபை வெராண்டாவில் கூட்டம் போட்டுப் பேசவும், சட்டசபை மெம்பர்கள் மேல் துண்டோடு வரவும் இவைகளுக்கெல்லாம் காரணம் நம்முடையகலாச்சாரம். நியாயத்திற்கும், ஒழுங்குக்கும் விரோதமாக நடந்திருக்கும் திருவண்ணாமலை ரமண ரிஷி நம்முடைய முதல் மந்திரிக்குக் குருவாயிருந்து ஆசீர்வாதம் பண்ணுவதும், உபதேசம் பண்ணுவதும், மோட்ச வாசலைத் திறந்து விடுவதும் நம்முடைய கலாச்சாரத்தின் மகத்துவம்தான். குருவினுடைய குணம் சிஷ்யனுக்கு வராமலிருக்கட்டும்.

இராவணன் சீதையின் தொடையில் ஒரு கையும் மயிரில் ஒரு கையும் போட்டுத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டு போனான். சீதை மடியிலிருந்துகொண்டே கண் செல்லா இடத்து ஆபரணங்களையும் உள்ளாடைகளையும் கழற்றிக் கீழே போட்டாள். இராவணனின் மடியில் ஒரு பெண் புரண்டுகொண்டிருந்தாள் என்று ஸம்பாதி அனுமானிடம் சொல்லுகிறான். இதெல்லாம் வால்மீகி ராமாயணத்தில் வால்மீகி சொல்லுகிறார். வால்மீக ராமாயணம்தான் ஆதி ராமாயணம். பூமியோடு பன்னகசாலையைப் பெயர்த்து ரதத்தில் இராமன் சீதையை வைத்துக்கொண்டு போனதாகக் கம்பர் சொல்லுகிறார். மாற்றத்தையும் கம்பருடைய புரட்டையும் பாருங்கள். இந்தப் புரட்டெல்லாம் கம்பருடைய அருள் வாக்காம். சீதையை இராவணன் வால்மீகப்படி எடுத்துப் போயுங்கூட அவன் பலாத்காரம் செய்யவில்லை. வீரத்திற்கும் நியாயத்திற்கும் ஏற்றதல்லவென்று நினைத்தான். இராவணனுடைய அந்தப்புரத்திலிருக்கும் பெண்களெல்லாம் இராவணனை மோகித்து வந்தார்களேயல்லாமல் பலாத்காரத்தில் வந்த பெண்கள் யாருமில்லை என்று அனுமானே சொல்லுகிறார். சூர்ப்பனகை செய்த குற்றத்திற்கு அவளைக் கொன்றிருக்கலாம். மூக்கு முலையை அறுப்பது கொடுமை. கொடூரமான கொள்ளைக் கூட்டம் கூட அஞ்சக் கூடியது.

இராமர் ஆரியனுமல்ல, திராவிடனுமல்ல, ஒரு லட்சிய புருஷனென்று முதன் மந்திரி சொல்லுகிறார். அநேக பாட்டு இராமனை ஆரியனென்றே கூப்பிடுகிறது. இராமாயணத்தில் "மறையோர் குறை முடிப்பான் பூண்டேன் விரதம்" என்று தன் லட்சியத்தை ராமரே சொல்லுகிறார். அகண்டாகார உலகத்தின் ஒரு சிறிய ராஜ்ஜியத்திலுள்ள ஆடுமாடுமுதலிய ஜெந்துக்களை பலியிட்டு, குடித்து வாழ்ந்த ஒரு கூட்டத்தாரின் குறைகளை முடிக்க அவதாரம்பண்ணின ஆதிமூலப் பொருளுக்கு, அதுஎப்படித் தோன்றிற்றோ? என்ன பொருத்தமோ? மந்திரிகள் இராமாயணத்திலில்லாததைச் சொல்லுகிறார்கள். இஷ்டம்போல்பேசுகிறார்கள். ரிஷிகள், தீர்க்கதரிசிகள், இந்து கலாதத்துவங்கள் இவர்களெல்லாம் வந்து சாட்சியான போதிலும் அதற்காக ஒரு கணக்கின் ஒழுங்கு அதிகபலம் பெற்றுவிடுமோ? ஆராய்ந்து பார்க்கும் சக்தியும் அறிவும் எங்கே ஒளிவது? இராமாயணத்தைப் பற்றி உள்ளது உள்ளபடியே அத்தனையும் சுயமரியாதைச் சங்கம் கூறியிருக்கிறது. இராமர், இராவணன், ரிஷி, அனுமான் எல்லாம் கற்பனையே. உண்மையாக இருந்ததுமில்லை, இருக்கவும் முடியாது. அதிலுள்ள ஆஸ்திகப்புரட்டெல்லாம்போக வேண்டுமென்பதே எங்கள் எண்ணம். அது வரையிலும் நாம் மனிதரோடு மனிதராக விருக்க முடியாது.

நிறைந்த சோலையில் புள்ளினங்களும், வண்டினங்களும் கூடிக் கனியுந் தேனுமுண்டு களிக்கும். பசும்புல் தரையில் விலங்குகள் புல்லுண்டு திரியும் காட்சி, வானகத்தே தோன்றும் மின்னொளி போலவும், நீலமணிக்கம்பளத்தின் மேல் உலவும் மேன்மக்கள் போலவும் தோன்றும். ஆறுகளிலும், ஓடைகளிலும் நீர் ஓடும். அருவி நீர் வீழும். பறவைகள் பாடும். மயில்கள் ஆடும். தென்றல் ஆட்டப் பூங்கொத்துக்கள் தலையசைந்தாடும். தமிழக முழுவதும் ஓரே நறுமணமாக இருக்கும். இவ்வாறு அமைந்திருந்தது பண்டைத் தமிழகம்.

நம் முந்தையோர் இவ்வாறு காடுகளைப் போற்றிக் காத்து வந்ததால் மழை குறைவின்றிப் பெய்தது. விளைவு பழுதின்றி விளைந்தது. நறுமணங்கலந்த தூயகாற்று எங்கும் என்றும் வீசியதால் மக்கள் நோயின்றி இனிது இன்புற்று வாழ்ந்து வந்தனர். நெல்லுணவினும் நல்லுணவான கனிகளுண்டு களித்தனர். அக்காடுகளில் ஆடு மாடுகள் மேய்ந்து பெரும் பயன் தந்தன. ஆடு மாடுகளில் சிறந்தது தமிழகம் என்பது, "நிரைமீட்டல்" என்னும் புறத்திணையாலும், (புறத்2) வணிகர், வேளாளர் தொழில்களில் நிரை காத்தல்' ஒன்றாதலாலும் விளங்கும். நிரை—மாட்டுக் கூட்டம். ஆடும் அடங்கும். அக்காடுகள் அன்று யாவர்க்கும் பொதுவுடைமையாக இருந்துவந்தன.

2. உழைப்பு:

மாரிக்காலம் வரவே வானம் மழை பொழியும். ஆண்களும் பெண்களும் ஒருங்கு கூடி நன்செய், புன்செய் பயிர்களை வித்தி விளைப்பர். உழுதல், விதைத்தல், நாற்று நடுதல், களை களைதல், அறுத்தல், களத்தடித்தல் முதலிய பருவங்கள் திருநாளாக இருக்கும். பொருநர் ஏர்க்களம் பாடுவர். (புறத் 21) பயிர் முன்பனிக் காலத்தே முதிர்ந்து பயன் தரும். பின்பனிக்காலத் தொடக்கமாகிய மாசிக்குள்ளாக அறுவடை செய்து வீடு சேர்த்துவர். காதலன்புற்ற ஒருவனும் ஒருத்தியு[ம்] திருமணம் முடிந்தபின், அன்புறக் கூடி இன்புற்[று] ...லுண்டா[ர்] கரு முதிர்ந்து, தம் ஓர் ...ருக்கொண்டு பிறர் என்னும் பெரும் பயன் அடைந்த போது, அக்காதலரும் பிறரும் அக்குழவிப் பயனைக் கண்டின்புறுதல்போல், நிலத்தை ஏருவிட்டுழுது, "தொடிப் புழுதி கஃசா உணக்கிப்" (குறள்: 1037) பண்படுத்தி, (தொடி—ஒரு பலம். கஃசு—கால் பலம்.) விதைத்து, நீர்பாய்ச்சிக் களை களைந்து காத்துவந்தவர், அவ்வுழைப்பின் பயன் முழுவதும் ஒருங்கடையப் பெற்றதும் பெரு மகிழ்வுற்று, நிலமகளை வாழ்த்தி, தாம் பெற்ற பெரும் பயனைத் தம் தொழிலுக்கு உதவினோர்க்கும், பிற தொழிலாளர்க்கும், அறத்திற்கும், அரசுக்கும் கொடுத்துக் களிப்பர். விளைவு வீடு வந்ததும் வணிகர் வேண்டிய வேண்டியாங்குகொண்டு கொடுப்பர். ஒவ்வொருவரும் தமக்கு வேண்டியவற்றை வாங்கி வைத்துக்கொள்வர். இங்ஙனம் கார்காலத்திலிருந்து பின் பனிக் காலம்வரை (ஆவணிமுதல் மாசி வரை. ஆடிமுதல் தை வரையே ஏற்றதாகும்.) ஊக்கத்துடன் உழைத்து, அவ்வுழைப்பின் பயனடைந்த அவர்கள் சிறிது ஓய்வெடுத்துக் கொள்ளவேண்டியது முறையேயாகலான், அவ்வாறே அன்னார் ஓய்வெடுத்துக்கொள்வர்.

3. ஓய்வும், உவப்பும்.

ஓய்வெடுத்துக்கொண்ட மக்கள் உழுது பயன்கண்ட உவப்பால் மனநலமும், உடல்நலமும், வாழ்க்கை நலமும் அடையும் பொருட்டு ஆண்களும் பெண்களுமாகிய முதியரும், இளையரும், முதிர்பருவத்தரும் ஒன்றுகூடி அக்காடுகளுக்குச் சென்று புனலாடியும், பூக்கொய்தும், கும்மி, குரவை போன்ற பலவகை விளையாட்டுகள் விளையாடியும் மகிழ்வர்; கனியுங் காயுங் கிழங்குந் தேனுமுண்டு களிப்பர்; புற்றரையிலும், பூப்பந்தலின்கீழ்ப் பூவிருக்கையிலும் இருப்பர்; ஆடியும் பாடியும் முத்தமிழையும் ...ர்ப்பர். புலவர்கள் இயற்கை வளத்தை இன்றமிழ்ப் பாக்களால் எடுத்துரைப்பர். இன்று தைத் திங்களில் சிறுமியர் காடுகளில் சென்று பூக்கொய்தும், விளையாடியும் வந்து பொங்கல் வைத்து மகிழ்வதும், தைப்பொங்கலும், தை...தல் சித்திரை முடிய நிலாவெளிச்...தில் சிறுவரும் சிறுமியரும் ...றுகூடி விளையாடுதலும் இத...னப்பூட்டும். (தொடரும்)

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டவே, அங்கேதான் நான் பிறந்தேனாம். கார்த்திகைப் பெண்கள் அறுவர் என்னை வளர்த்தார்களாம். என் தாய் பார்வதி ஒருமுறை என்னைப் பார்க்க வந்தபோது ஆறு உருவமாயிருந்த என்னை, ஒருருவமும் ஆறு முகமும் உள்ளவனாக்கி விட்டாளாம். இப்படியாக நான் வளர்ந்து கொண்டிருந்தேன்."

"ஒரு நாள் நான் படுத்து உறங்கிக் கொண்டிருந்தேன். ஏதோ சப்தம் கேட்டு விழித்துக்கொண்டேன். சை! என் தந்தை காமசூத்திரங்களை ஒவ்வொன்றாய் விளக்கிக்காட்டி, நிதர்சனமாய் எல்லா லீலைகளையும் என் தாயாருக்குச் செய்து காட்டிக்கொண்டிருக்கிறார், பட்டப்பகலில். நான் குழந்தையென்ற நினைவு போலும். நான் எல்லாவற்றையும் கவனித்து வைத்துக்கொண்டேன்."

"பிறகு, நான் பெரியவனானதும் பிரம்ம தேவனிடத்திலே என்னைப் படிப்புக்காக அனுப்பினாள் என் தாய். அவரிடத்தில் காம சூத்திரங்களுக்கு விளக்கம் கேட்டேன். தெரியவில்லை. விழித்தார். என்னைக் கண்டித்தார். 'இது தெரியாத நீ எனக்குக் குருதேவனாயிருக்க அருகதையற்றவன்' என்று கூறிப் பிரம்மனைச் சிறையிலடைத்து விட்டுச் சத்திய லோகம் சென்றேன். அங்கே அவர் மகள்—சே, சே—மனைவி......

"என்ன மகள், மனைவி என்று ஏதேதோ மாற்றிச் சொல்லுகிறாய்?"

"ஒன்றுமில்லை. பிரம்மதேவன் மகள் தான் சரஸ்வதி. அவளது அற்புதமான அழகைக் கண்டு தானே அவளை அனுபவிக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டார் பிரம்மன். அவள் இணங்காமல் ஓடினாள். இவரோ அவளை விடாமல் துரத்திப் பிடித்து பெண்டாக்கிவிட்டார். சதா இவர் நாவில் சரஸ்வதி நாமஸ்மரணை தான்"

"ஊம். அப்புறம். சத்தியலோகத்தில் சரஸ்வதியிருந்தாள்..."

"இவள் தான் சகலகலா வாணியாயிற்றே, இவளிடம் காமக்கலைபற்றிச் சந்தேகம் கேட்கலாம் என்று கருதிக் கேட்டேன். அவ்வளவு தான். கிழட்டுத் தந்தையிடம் உண்மையான இன்பத்தைக் கண்டறியாத சரஸ்வதி இளைஞனான என்னைக் கண்டதும் இலேசில் விடுவாளா? ஒரே இன்ப வெள்ளம்...

சங்கதி எப்படியோ என் தாயாருக்கு எட்டிவிட்டது. அவள் தான் பிரம்மனுக்குக் கள்ளக்காதலியாயிற்றே, ஆகவே பிரம்மாவுக்குப் பரிந்து பேச வந்து என்னைத் தாறுமாறாகத் திட்டினாள். 'குரு பத்தினியைப் பெண்டாளலாமா' என்றாள். சந்திரன், இந்

திரன் முதலியோர் செய்யவில்லையா' என்று திருப்பிக்கேட்டேன். அவள் கோபம் அதிகரித்தது 'உன்முகத்திலேயே விழிப்பதில்லை' என்று வேகமாகக் கூறிவிட்டுப் புறப்பட்டேன். சந்நியாசிக் கோலமணிந்து பழனிக்கு ஓடிவந்து விட்டேன். என் தாய் வருந்தினாள். எப்படியாவது எனக்கு மணமுடித்து விட்டால் திருந்தி விடுவேனென்று நினைத்து இந்திரன் மகள் தேவயானையைப் பெண்பேசினாள். எனக்கு விருப்பமில்லைதான். இந்திரனோ கௌதமன் மனைவி அகல்யையுடன் கள்ளத்தனமாய்க்கூடி "ஆயிரங்கண்ணான்" என்று அழியா அவமானப் பெயர் பூண்டவன். இவன் மனைவி சசிதேவியோ, தேவலோகத்திற் படையெடுத்தோருக் கெல்லாம் மனைவியாயிருந்தவள். இப்படிப்பட்ட யோக்கியதையுடைய பெற்றோர்களின் பெண்ணென்றால், அவள் மட்டும் எப்படி நல்லொழுக்கம் உடையவளாயிருக்க முடியும். நாரதன் இருக்கிறானல்லவா?...

"எந்த நாரதர்—கலகக்காரர்...?"

"ஆமாம். அவன் தான் எங்கள் ஊருக்கு 'டாபர்மாமா' மாதிரி. இவன் கூட தேவயானையிடம் தனியான காதல் கொண்டவன் போலும். இது பிறகே தெரியவந்தது. அன்னையின் வார்த்தையை மீறாமல் தேவயானையை மணம் புரிந்தேன். விருப்பமில்லாத் திருமணத்தினால் இன்பமேது? நாங்களிருவரும் ஒரு நாள்கூட ஒத்து வாழவில்லை. இடையிடையே நாரதன் வந்து போய்க்கொண்டிருந்தான். ஒரு நாள் என்னிடம் வந்து, காட்டில் கடைந்தெடுத்த பொற்சிலைபோல் வேட்டுவகுலப் பெண்ணொருத்தியிருக்கிறாள். பெயர் வள்ளியாம். நம்பிராஜன் மகளாம். அவளை நீ முயன்றால் மணக்கலாம். ஆனால் வேடனைப்போல் வேடமணிந்து சென்றால் தான் முடியும் என்று ஏதோ கூறினான், எல்லாம் அவன் சொந்த நன்மையை உத்தேசித்தே இருக்கலாம்.

சரியென்று புறப்பட்டுக் காட்டுக்குப் போனேன். அங்கே ஒரு குளத்தங்கரையில் என் தமையன் கணபதி! எதையோ குனிந்தும், நிமிர்ந்தும், சாய்ந்தும் உற்றுப்பார்த்துக் கொண்டிருக்கக் கண்டேன். ஒன்றுமில்லை. யாரோ ஒரு பெண் குளித்துக்கொண்டிருக்கிறாள்; அவள் என் தாயைப் போல் இருக்கிறாளாம் என்று அவளது இயற்கையழகைப் பல கோணங்களிலுமிருந்து பார்த்து இரசிக்கிறான் கணபதி. இது ஒரு பைத்தியம்! 'எங்கே போகிறாய் தம்பி?' என்றான் என் அண்ணன். விஷயத்தைச் சொன்னேன். எல்லாப் பெண்களையும் பற்றி இவனுக்குத் தெரியாததா? "அடே, அந்தப்பெண் உனக்கு ஏனப்பா? அவள் காட்டில் யாரோ ஒரு முனிவனுக்கும் அவனது கள்ளக் காதலிக்கும் பிறந்தவளாம். அவள் எங்கேயோ வள்ளிக் கிழங்குக் கொடியருகே இக் குழந்தையைப் பெற்றுப் போட்டுவிட்டுப் போனாளாம். அதை இந்த நம்பிராஜன் வளர்த்துவருகிறான். அது என்ன குலமோ?" என்றான் கணபதி. "என்ன குலமானாலும் நம் குலத்தை விட ஆபாசமாயிராதே" என்று நான் மறுத்துக் கூறிவிட்டு விரைந்தேன்.

"ஆகாகா! அங்கே, தினைப்புனத்தில் வள்ளி அழகுத்திரளாக ஒரு பரண் மீதிருந்து கொண்டு ஆலோலம் பாடிக் கொண்டிருந்தாள். இவளல்லவா பெண் என்று வியந்தேன். அசல் வேடனைப்போலவே வேடமணிந்து அவளிடம் காதல் மொழிகள் பல புகன்றேன். அவள் ஒன்றுக்கும் வயப்படவில்லை. கடைசியில் அவள் யானையைக் கண்டால் அச்சப்படுவாள் என்றறிந்து, இரகசியமாக என் அண்ணன் உதவியை நாடினேன். அவன் தன் முகத்தை முன்னே காட்டி யானையின் கன்றுபோல் அலறி ஓடிவந்தான். இதைக் கண்ட வள்ளி அஞ்சி நடுநடுங்கிவிட்டாள். இதுதான் தக்க தருணமென்று கூறி யானையை விரட்டுவதாகக் கூறி வள்ளியை வற்புறுத்தி மணந்தேன். நம்பிராஜன் முதலியோர் விரட்டிக்கொண்டு ஓடி வந்தனர். அதற்குள் வள்ளியை இழுத்துக்கொண்டு ஊருக்கு ஓடிவிட்டேன்.

"ஊர் போய்ச் சேர்ந்ததுதான் தாமதம். தேவயானைக்கும் வள்ளிக்கும் சக்களத்திப் போராட்டம் பிரமாதமாய் மூண்டுவிட்டது. அன்றுமுதல் ஒரு நாள்கூட எனக்கு வீட்டில் நிம்மதி கிடையாது. ஒருத்தியை மற்றொருத்தி பேசும் பேச்சும், அவர்கள் விண்டவாளங்களை வெளிப்படுத்தும் முறையும்—அப்பப்பா-சகிக்கவில்லை. எங்காவது ஓடிவிடலாமா என்று தினமும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். என்னையும் விடுவதில்லை அவர்கள். அடடா, இரண்டுபெண்டாட்டிக்காரன் பாடு திண்டாட்டம் என்பார்களே அது சரிதானப்பா!"

"ஆமாம். அதற்காகத்தான் இப்போது எங்கள் நாட்டில் இருதார மணத் தடைக்குச் சட்டம் கொண்டு வந்துவிட்டோம்."

"இப்படி நான் திண்டாடுகிறேன். ஒரு பக்தன் என்னை வேண்டுகிறான், 'ஏ கந்தா, நான் உன் பக்தன்தானே. நான் பிரமச்சாரியாகவே காலங் கழிக்கிறேனே, கலியாணம் செய்துகொள்ளவோ வழியில்லை. உனக்கேன் இரண்டு மனைவியர், எனக்கு ஒருத்தியைக் கொடுத்து ஏழையைக் காப்பாற்றக்கூடாதா?' என்று. காலம் வர வரக் கெட்டுப்போனதைப் பார்த்தாயா. மனம் பதைக்கிறதப்பா"

"ஏனப்பா பதைக்கிறது? உன் தந்தை இயற்பகை நாயனார் மனைவியைக் கேட்கவில்லையா? அதுமட்டும் எந்தவகையில் நியாயம்?" என்று அதட்டிக் கேட்டேன்.

"பழங்காலத்தில் இந்தக் கோளாறு கிடையாது உங்கள் நாட்டில். எதையோ இயற்கையை முருகு என்ற பெயரோடு போற்றிவந்தார்கள். அதைக் கொண்டுவந்து கந்தபுராணத்தோடு கலந்து, திருமுருகாற்றுப்படையும் ஒரு கந்தபுராணம்தான் என்ற அளவில் புளுகி, நாட்டையே குட்டிச்சுவராக்கி, மக்களெல்லாம் வறுமையாலும், மடமையாலும் வாட, மலைமேலெல்லாம் எனக்குக் கோயிலும், குருக்களும், பாலும், பஞ்சாமிர்தமும் அப்பா! மனம் கொதிக்கிறது! மலைப் படிகளில் காலொடிந்து, கையொடிந்து, கண்ணிழந்து, நோய் மிகுந்து பல்லாயிரக்கணக்கானவர் கூச்சலிட, இதை செவி மடுக்காது என் கோயிலுக்கு வரும் பக்தர்கள் உண்மையில் மனிதர்கள்தானா என்று நான் சந்தேகப்படுகிறேன்."

"இவ்வளவு சீர்திருத்தவாதிபோல் பேசுகிறாய். நீயே இதை என் மக்களிடம் நேரில் கூறக்கூடாது. கூறாவிட்டாலும் புளுகுப் பிரசாரம் செய்வோரின் மண்டையிலே ஏன் நீ அடிக்கக்கூடாது?"

"அந்த வேலைக்குத்தான் நீங்கள் இருக்கிறீர்கள்! தொடர்ந்து நடத்துங்கள்" என்று கூறிக்கொண்டே அந்த ஆசாமி, ஆறுமுகன், எழுந்து 'விர்' ரென்று மேலே கிளம்பிவிட்டான்.

"ஆ—ஆ" என்று அலறினேன்.... நன்றாக இருட்டிவிட்டது. அப்போதுதான் பிறைச் சந்திரன் வானமுகட்டில் வருவது தெரிந்தது. மெள்ளக் கயிற்றுக் கட்டிலை விட்டு எழுந்து கீழே இறங்கினேன், மெத்தைப்படிவழியாக.

["பெருச்சாளி"]

★

கலைச் செல்வி!

சென்னை மூலக்கொத்தளம் தோழர்களான பி. எஸ். மணி—அந்தோணியம்மையாரின் பெண் மகவுக்கு 8-4-49-ல் தோழர் தங்கராசுவால் கலைச் செல்வி எனப் பெயர் சூட்டப்பெற்றது. [இதன் நினைவாக அனுப்பிய நன்கொடை ரூ. 1-ம் வரப்பெற்றோம், நன்றி! ஆ—ர்]

அச்சிட்டு வெளியிடும் ஆசிரிய
என். கரிவரதசாமி. தமிழன் அச்சக
ரி வீதி, ஈரோடு.